யாழ்ப்பாணம்

## யுத்தம் முடியவில்லை ராணுவம் மீது விமர்சகர்கள் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடரும் போரை இன்னும் ஏன் முடிவிற்கு கொண்டுவரவில்லை என இலங்கையில் பல விமர்சகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனராம்.

இது குறித்து பலத்த கண்டனம் தெரிவித்த இராணுவ அதிகாரி ஒருவர் இதுபற்றி 'லங்கா புவத்திற்கு' தெரிவிக்கையில்:

பாதுகாப்பு படையினர் எதிர்கொள்ளும், எதிர் நோக்கும் யுத்த தந்திரங்களை இந்த விமர்சகர்கள் புரிந்துகொள்ளவில்லை. வடக்கின் பூகோள சூழ்நிலை குறிப்பாக யாழ். குடாவின் பூகோள சூழ்நிலையை பயன்படுத்தி புலிகள் யுத்த தந்திரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் படையினரின் எதிர்ப்பு நடவடிக்கை தொடரும் எனவும் அந்த அதிகாரி கூறினார். (இ)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 17 இதழ் 104
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30— 05 — 1993

## ஆளும் கட்சியில் சரியான தலைமையில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது தலைமைத்துவம் இல்லை. சரியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆளில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

## ● பொலநறுவை பகுதியில்

# புலிகளின் அதிவேக அதிரடியில்

# ஆறு இராணுவம் உயிரிழப்பு!

## பதினைந்து காவலரண்கள், பத்து வீடுகள் அழிப்பு

(திருமலை)

பொலநறுவை பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடாத்திய அதிவேக அதிரடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியானுர்கள் 15 இராணுவ காவலரண்கள் இராணுவத்தினரின் பத்து வீடுகள் ஆகியன முற்ருக அழிக்கப்பட்டன. பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

3-ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைகளுக்கு அதிகாரம் போதாது

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் குறைவாகவே உள்ளது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி. சில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரம் இப்போது மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ளது. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் கொண்டுவர வேண்டுமானுல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும்.

ரூபவாஹினி, வானொலி போன்றவை மத்திய அரசாங்கத்தின்கீழ் தான் உள்ளது. மாகாணசபைகளுக்கு அந்த தொடர்பு சாதனங்களில்

(4-ம் பக்கம் பார்க்க

## அரசியல்வாதிகளை கொல்ல புலிகள் கொழும்பு விரைவு?

(கொழும்பு)

கொழும்பில் சிரேஷ்ட அரசியல்வாதிகளையும், அரசு உயர் அதிகாரிகளையும் கொலை செய்ய விடுதலைப் புலிகளின் விசேட குழு ஒன்று கொழும்பு விரைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

இவ்வாறுனதொருதகவலின் அடிப்படையில் கடந்த சில தினங்களில் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் சமார் 600 தமிழ் இளைஞர்கள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அரசியல் தலை

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளை பிடிக்க 40 பேரடங்கிய படை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விசேட குழு ஒன்று கொழும்பு விரைந்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து இவர்களைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு தமிழர்கள் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இவ்வாரத்தில் இரு வேறு இடங்களில் இரு தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 24-ந் திகதி கொக்கட்டிச்சோலை பகுதியில் இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் நடத்திய தாக்குதலில் தவராசா என்பவர் கொல்லப்பட்டார்.

28-ந் திகதி சவிரிக்குளம் என்ற இடத்தில் தேன்எடுக்கச்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு 5000 பரல் ம. எண்ணை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திற்கு மாதம் ஒன்றுக்கு 5000 (ஐயாயிரம்) பீப்பா மண்ணெண்ணெய் அனுப்புவதற்கு கொழும்பில் அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ பிரேமா ஆட்சியைவிட ஜனநாயக விரோத செயல் விஜயதுங்கா ஆட்சியில் அதிகம்

(கொழும்பு)

ஜனதிபதிபிரேமதாசா ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஜனநாயகவிரோதசெயல்களைவிட ஜனதிபதி விஜயதுங்க வின் புதிய ஆட்சிக்காலத்தில் இதுகூடுதலாக உள்ளது என்று ரனவக ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது: புதிய ஜனதிபதி விஜய

(3-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி கடலில் 3 மர்மக் கப்பல்

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதிக் கடலில் மூன்று மர்மக் கப்பல்கள் நடமாடுவதாக கிடைத்த தகவலையடுத்து இலங்கை-இந்திய பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்

இக்கப்பல்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்திருக்கலாம் என்ற தகவல்களும் இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்துள்ளதாம்.

மேற்படி 3 கப்பல்களும் இந்தியாவிலிருந்து வரவில்லை எனவும் வேறு ஒரு நாட்டிலிருந்தே வந்திருக்கவேண்டும் என்ற தகவலும் பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்துள்ளதாம். (ஈ-இ)

## தெரிவுக் குழுவிடம் யோசனை ஐ.தே.க, சு. க. சமர்ப்பிக்கும்?

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் ஆளும் ஐ. தே. க. வும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக தமது யோசனைகளை தெரிவிக்கவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விரு கட்சிகளும் தங்கள் யோசனைகளை கூட்டாக இணைந்துதெரிவிக்கவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளபோதும் அச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப் படவில்லை.

இனப்பிரச்னை தீர்வுக்குமேற்படி இரு பிரதான கட்சிகளும் தத்தமது யோசனைகளை தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் 10 ம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லையென தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பி.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsule கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-111)

### சோதிடம்

எண்சோதிடம், கிரகநிலை, ஆத்மஞானம் போன்ற பல விபரங்களோடு கூடிய கைரேகை சாஸ்திரம் பார்க்குமிடம் வல்லிபுரக்கோவில்வீதி, பார்ப்பவர், கைரேகை ஞானி, S. நித்தியானந்தம். (சி-130)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைவிடி, தலை ஊலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-113)

### மணமகன் தேவை

27 வயது, திருவோண நட்சத்திரம் உள்ள மணப்பெண்ணுக்கும் மக நட்சத்திரம் செவ்வாய் பாவமுள்ள 33 வயதுள்ள பெண்ணுக்கும் வெளிநாடு. உள்நாடு மணமகன்தேவை. செ. விஜயரெட்ணம் நவாலி கிழக்கு. சி-148

### 1 - 6 - 93 வியாழவக்கிரம் முடிவு

11 - 6 - 93 சனிவக்கிரம் ஆரம்பம். 12 - 6- 93 செவ்வாய் மாற்றம் இராசிப்பலன் கள் விற்பனையாகின்றது சனிக்கு அட்டமத்து வியாழனும் நாலிற்கு நன்மையில்லை. ஜாதகங்களின் கணிப்புகளுக்கு சந்திக்கலாம். 'சத்யா' இடிகுண்டடிகோமை) கட்டுடை. (சி-158)

### புதிய வகுப்புகள்

30 -05-93 ஞாயிறு 'இன்று' ஆண்டு 3 புதிய வகுப்புகள் பி. ப. 2-00 மணிக்கும் ஆண்டு 5 புலமைப் பரிசில் (Paper Class) பிற்பகல் 4-00 மணிக்கும் ஆங்கில இலக்கியம் பிற்பகல் 4-30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன. மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (சி-156)

### தவறிவிட்டது

மா. ஜெயவதனன் என்பவரின் 682330716 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை சாவகச்சேரி நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். மா. ஜெயவதனன், "மதிபதி" மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (சி-160)

### புதிய நிர்வாகசபை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் புதியநிர்வாகசபைத் தெரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (159)

---

## வலி. கிழக்கு வடபகுதி
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## விசேட அறிவித்தல்

எமது சங்க எல்லைப்பரப்பிலிருந்து இடம் பெயர்ந்து வேறு சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் இலவச நிவாரணம் பெறுபவர்கள் தங்களது உலர் உணவு அட்டை, உலர் உணவு முத்திரை, உணவு பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் நேரடியாக எமது சங்க தலைமைப் பணிமனைக்கு (ஆவரங்கால், புத்தூர்) சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வலி. கிழக்கு வட பகுதி
பல நோக்குக் கூ. சங்கம்
அச்சுவேலி.

(எ- 3166)

---

## வைத்திய சேவை
## இடமாற்றம்
### Dr. S. பாலச்சந்திரன்

(முன்னாள் சங்கானை, ஊர்காவற்றுறை, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்)

முன்னர் 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்—வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக இயங்கி வந்த பாபா கிளினிக் தற்போது பிளாக் ரோட், சங்கானையில் (இல்லத்தில்) நடைபெறுகிறது.

நேரம்

தினமும் காலை 8-00 மணி — பகல் 12-00 மணி வரை
மாலை 4-00 மணி — மாலை 6-00 மணி வரை

(சி 154)

---

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் இ. இரட்ணபாஸ்கரன்
(பாஸ்)

மலர்வு: 12-03-1974 உதிர்வு: 23-05-1991

**திதி: 30-05-1993**

அன்னையாய் தந்தையுமாய் உன்னை
பாசத்துடன் வளர்த்த அத்தைமார், மாமன்,
ஆசையோடு பாசத்துடன் அண்ணா - என்று
அரவணைத்த உன் சகோதர சகோதரிகள்,
பாஸ் என்று பாசத்துடன் உன்னை
அழைத்த உன் தோழர்கள்,
நேசத்துடன் பழகிய உன்
பிரிய அக்காமார்கள்,
எல்லோரையும் தவிக்க விட்டு - நீ
பிரிந்து ஆண்டுகள் இரண்டாகுதடா!
ஆயினும் உன் நினைவுச் சுவடுகள் - என்றும்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்
கழல் காற்றில் சிக்கித் தவிக்கின்றோம்
பாஸ்கரா?
உன் நினைவலைகள் ஒரு போதும்
ஓயாது!
மீண்டும் எம்மிடம் சேரமாட்டாயா?
என ஏங்கி தவிக்கிறோம்
பாஸ்கரா ஒருதரம் அபயமளிக்காயா?
கண்ணிலே நீர் எதற்கு காலமெல்லாம்
தவிப்பதற்கா ஐயனே பாஸ்கரா
ஆத்ம சாந்திக்காக வல்லை விநாயகனைத் துதிப்போம்

நின்பிரிவால் தவிக்கும்

சகோதர சகோதரிகள், அத்தைமார்,
மாமன், அக்காமார்.

இல: 81, சிவப்பிரகாசம் ரோட்,
யாழ்ப்பாணம்.

(சி-157)

---



### கோண்டாவில் தில்லையம்பதியில் இன்று ஐந்தாம் திருவிழா

ராகம்: பாகேஸ்ரீ

தாயே சிவகாமி தண்ணருள்
தாருமம்மா!
நீயே அன்றி இந்த நிலத்தில்
கதியுமுண்டோ?
தீன தயாபரி தில்லையம்பதித்
தேவி
பாதாரவிந்தம் அருள் பார்வதி
பாகேஸ்வரி
தில்லையம்பதியாளே சிவகாம
சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா!
— தேவி

ஆக்கம்:
கவிமாமணி ந. வீரமணிஐயர்
(சி143)

---

### கோண்டாவில் தில்லையம்பதி
### அருள் மிகு
## ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
### வைகாசி மஹோற்சவ
## 5ம் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று (ஞாயிற்றுக்கிழமை)

### காலை நிகழ்ச்சி

மங்கள இசை வழங்குபவர்

நாதஸ்வரம்

நாதஸ்வர கான கலாநிதி கலாசூரி நாதஸ்வர மேதை
அளவையூர் என். கே. பத்மநாதன்
நாதஸ்வர வித்துவான் ஆர். கேதீஸ்வரன்

தவில்

அகில உலகப் புகழ் லயஞான சாகரம்
தெட்சணாமூர்த்தியின் புதல்வர் உதயசங்கர்
தவில் வித்துவான் பி முருகதாஸ்

### மாலை நிகழ்ச்சி

மங்கள இசை வழங்குபவர்

நாதஸ்வரம்

நாதஸ்வர இசை மணிகள்
கோண்டாவில்
வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி
சகோதரர்கள்
தவில் வித்துவான்கள் பி. கணேசன், ஆர். பாஸ்கரன்

நாதஸ்வரம்

நாதஸ்வர நாத கான பூஷணம்
இணுவையூர் என். ஆர். சந்தானகிருஷ்ணன்
தவில் வித்துவான் லய ஞான சாகரம்
கே. ஆர். புண்ணியமூர்த்தி

நாதஸ்வரம்

மதுரகான நாதஸ்வரமணி சுரஞானரெத்தினம்
நாதஸ்வரகான பூபதி நாதஸ்வர வித்துவான்
அளவையூர் எஸ். எஸ். சிதம்பரநாதன்
நாதஸ்வர வித்துவான் என். கவிதாஸ்

தவில்

தவில் வித்துவான்கள்
எம். சொர்ணலிங்கம், என். பாலசுப்பிரமணியம்

நாதஸ்வரம்

நாதஸ்வர வித்துவான்கள்
ஏ. முருகானந்தம் கே. சிறிதரன்

தவில்

இணுவையூர் தவில் மேதை
என். ஆர். சின்னராஜா அவர்களின் புதல்வர்கள்
என்.ஆர்.எஸ்.ரவீந்திரன் என்.ஆர்.எஸ்.சுதாகரன்

நாதஸ்வரம்

இணுவையூர் நாதஸ்வர மேதை
என். ஆர். கோவிந்தசாமி அவர்களின் புதல்வர்கள்
என். ஆர். கே. இரத்தினகுமார்
என். ஆர். கே. வாகீஸ்வரன்

தவில்

தவில் வித்துவான்கள்
என். முருகானந்தம் கே. வரதன்

இங்ஙனம்
5ம் திருவிழா உபயகாரர்,
திருக்கோயில் பரிபாலன சபை.

தில்லையம்பதி
30-05-93.

(சி 159)

# உலக நாடுகளில் 10 வருட யுத்தத்தில் 15 லட்சம் குழந்தைகள் பலி

(லண்டன்)

உலக நாடுகளில் கடந்த 10 வருடகாலமாக தொடரும் கொடூர யுத்தங்கள் காரணமாக சுமார் 19 லட்சம் குழந்தைகள் பலியாகியுள்ளதாகவும் 40 லட்சம் குழந்தைகள் அங்கவீனமடைந்துள்ளதாகவும் யுனிசெப் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சுமார் 50 லட்சம் குழந்தைகள் தமது சொந்த நாடுகளைவிட்டு அந்நிய நாடுகளில் அவதியுறுகின்றனர். 20 லட்சம் குழந்தைகள் தமது தாய் நாடுகளிலேயே சொந்த வீடுகளில் வசிக்கமுடியாமல் அகதிமுகாம்களிலும் அந்நிய வீடுகளிலும் சொல்லொணா துயருடன் வாழ்கின்றனர். (க)

# சமய அறிவு பேச்சு போட்டி முடிவு

(கொழும்புத்துறை)

சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு சரசாலை இந்து மன்றம் மேற்படி ஆலயத்தில் ஓர் சமய அறிவுப் பேச்சுப்போட்டியை நடாத்தினர். செயலாளர் திரு. க. இரகுநாதன் தலைமையில் இப்போட்டி இடம் பெற்றது.

போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் பின்வருமாறு:

பாலர்பிரிவு: 1- க. பிரசாந்தி. 2- ம. மிருணா. 3- வே சபிதா. ஆரம்பப்பிரிவு: 1. செ. கலைவாணி, 2- அருணா. 3- க. தனுசா. கீழ்ப்பிரிவு: 1- ச. சத்தியபாலு, 2- ந ஜெயரசனா, 3-அ. ஜெகரஜனி. மத்தியபிரிவு: 1- ஜெயகுருஜி, 2- த சோபனா 3- க காமினி, மேற்பிரிவு: 1- மா. றஜீதா, 2- செ. ஆனந்தராணி, 3- ச. சகுந்தன் அதிமேற்பிரிவு: 1 இ. நிரஞ்சனா. 2- க. சுதாகரன், 3- கு- ஜெயபாஸ்கரன். (154)

# இத்தாலிய குண்டு வெடிப்பு யாழ். பெண்ணும் பலி

(ரோம்)

இத்தாலியில் புளோரன்ஸ் மாநிலத்தில் சில தினங்களுக்கு முன் இடம்பெற்றகார்க்குண்டு வெடிப்பில் தாவடியைச் சேர்ந்த ஐமுனா வரதராசன் என்பவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் சில வாரங்களுக்கு முன் இத்தாலி புறப்பட்டதாகவும் அங்கு இடம்பெற்ற ஓவியக் கண்காட்சியை பார்வையிடச் சென்றபோது இப்பயங்கர சம்பவம் இடம்பெற்றதாகவும் இவரது கணவர் இத்தாலியில் பல வருடகாலம் வேலை பார்த்து வருபவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் மேலும் பல இலங்கையர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் மேலதிக தகவல்கள் எதுவும் இதுவரையில் தெரியவரவில்லை. (க)

# இந்தியா — பாகிஸ்தான் உறவு தொடரும்

## — பாக். பிரதமர் நவாஸ்

(இஸ்லாமபாத்)

இந்தியாவுடன் நல்லுறவையே பாகிஸ்தான் விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும்; குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இருநாடுகளுக்கும் இடையே நிலவும் கசப்புணர்வுகள் பேச்சுவார்த்தை, விட்டுக்கொடுத்தல், மற்றும் நல்லெண்ண அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும் என்பதே பாகிஸ்தானின் விருப்பமாகும்.

பாகிஸ்தான் பிரதமராக மீண்டும் நியமிக்கப்பட்ட நவாஸ் ஷெரீப் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய முதலாவது செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளையில் பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப் மீண்டும் அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இராசி பலன்

30-05-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 17)

தசமி பி. இ. 4-33 வரை, உத்தரம் மாலை 6-58 வரை, சுபநாள், இராகுகாலம் மாலை 4-22 முதல் 5-52 வரை, சுப நேரம் காலை 8-52 முதல் 10-22 வரை.

மேடம்: நன்மதிப்பு, பணிமாற் சகாயம், சகோதரி நன்மை.

இடபம்: நிலைமாற்றம், பணமிகுதி, வேண்டாத உறவு.

மிதுனம்: இடையூறுகள், இனசனப்பிரிவு, பலக்குறைவு.

கடகம்: நண்பர் சந்தோஷம், தொழில் லாபம், அதிகாரம்.

சிம்மம்: நடைக் கஷ்டம், குடும்பப்பகை, மன வேதனை.

கன்னி: புத்திரர் நன்மை, அன்னியர் உதவி, குடும்பசுகம்.

துலாம்: வேண்டாத யோசனை, உடல்நலக்குறைவு. மருந்துண்ணல்.

விருச்சிகம்: சயன சுகம், விருந்து வைபவம், தொழில் சிறப்பு.

தனுசு: வாக்கு வசீகரம், பயண நன்மை, தெய்வ வழிபாடு.

மகரம்: உறவினர் துன்பம், பண நெருக்கடி, காரியதடை.

கும்பம்: லாபமிகுதி, நிலைப் பிரிவு, பெரியோர் பகை.

மீனம்: பொதுசன மதிப்பு, பண வரவு, நற்பணி.

— ஜோதிடர்

## இன்று

(யாழ்ப்பாணம்

நல்லூர்க்கந்தன் சிக்கன கடன் வழங்கு சங்க 10-வது ஆண்டுவிழாவும் நல்லூர்க் கந்தன் உளவலக அபிவிருத்திக்கழக 5-வது ஆண்டுவிழாவும் இன்று 30-ம் தேதி பிற்பகல் 2-00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் திவாதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும். (158)

0 0 0

யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் மாதாந்த இலக்கிய கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள அவர்களது பணிமனையில் நடைபெறவுள்ளது. இன்றைய கலந்துரையாடலுக்கு தமிழ்மொழி வித்தகர் திரு க. சொக்கலிங்கம் தலைமை தாங்குவார். கலந்துரையாடலில் கலாநிதி சுரேஷ் கனகராசா, ஐ. சாந்தன், க. தணிகாசலம் பங்கு கொள்வர். (எஸ்)

0 0 0

கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி இந்து மயானம் இன்று 30-ம் திகதி பி. ப. 3-00 மணிக்கு இப்பகுதி மக்களால் சிரமதானப் பணிமூலம் செப்பனிடப்படவுள்ளது (154)

0 0 00

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையிலுள்ள மருத்துவ நிலையத்தில் வட இலங்கை மருத்துவ சங்க சார்பில் இன்று 30-ம் திகதி பிற்பகல் 3-00 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் திருமதி எஸ். நாகேந்திரா உரையாற்றுகின்றார். (சு)

0 0

(அரியாலை)

அரியாலை கிழக்கு புனித அன்னை வேளாங்கண்ணி திருவிழா இன்று 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு நடைபெறும். திருநாள் திருப்பலி சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெறுகிறது. (59)

0 0 0

(நெல்லியடி)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபையின் 49-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 30-ம் தேதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (160)

## மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு சீ. சீ. த. க. பாடசாலையில் மெய்வல்லுனர் போட்டி அதிபர் வேலாயுதம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கோப்பாய் வட்டவை பொறுப்பாளர் பாடசாலையின் புதிய விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்தார்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி தியாகராசா தம்பதியினர் கலந்துகொண்டனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு திருமதி தியாகராசா பரிசில்களை வழங்கினார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# விவசாயிகளுக்கு வாளிகள் விநியோகம்

(கொழும்புத்துறை)

கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாளிகள் மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு தொண்டுரம் கமநல சேவை திணைக்களத்தால் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட கமநல சேவை திணைக்களம் இதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

தொண்டுரம் கமநல சேவை நிலையப் பகுதியில் உள்ள விவசாயிகள் வாளி ஒன்றைப் பெறுவதற்கு முற்பணமாக இருநூறு ரூபாவை கமநல சேவை நிலையத்தில் நேரில் செலுத்திப் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. [154]

## பொலநறுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை 1-20 மணியளவில் பொலநறுவை மாவட்டம் சிறிலங்கா இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள ஜெயந்திபுர என்ற கிராமத்திலுள்ள மினி முகாமினைச் சுற்றி வளைத்து விடுதலைப் புலிகள் இந்த அதிரடித் தாக்குதலை நடத்தினார்கள்.

இம்முகாமில் 40 இராணுவத்தினர் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 15 நிமிட நேரம் இடம்பெற்ற இந்த அதிரடித் தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை அரச தரப்பினால் உர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இராணுவ தரப்பில் இழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் ஏ. கே இலகு இயந்திரத் துப்பாக்கி உட்பட ஐந்து நவீனரக துப்பாக்கிகளும், ஷெல் செலுத்தி ஒன்றும் ஏனைய இராணுவ தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட இராணுவ தளபாடங்களின் விபரம் வருமாறு: ஏ. கே இலகு இயந்திர துப்பாக்கி - 1, அதற்குரிய ரவைக் கூடுகள் - 7, லிங்குகள் 673, ரவைக்கூடுதாங்கி அணிகள் - 3, ரி 56 ரக துப்பாக்கிகள் - 4 60 மி. மீ. ஷெல் செலுத்தி - 1, ஷெல்கள் - 5, நடுத்தர ரவைகள் 2700, நடுத்தர காஸ்ரவைகள் - 45, ரவைக்கூடு - 1, எம். 75 ரக கைக்குண்டுகள் - 5, தொலைத்தொடர்பு சாதனம் - 1, கத்தி 1, ஏ. கே. ரவைக்கூடு தாங்கி அணிகள் - 8, சப்பாத்துகள் 21 சோடி, இராணுவ இடுப்பு பட்டிகள் - 08, மழைக்கவசங்கள் - 6, பைகள் - 5, தண்ணீர் தாங்கிகள் - 2,

## வீரச்சாவு

இம்மோதலில் ஈழகுமார் அல்லது சுமன் (அழகுப்பொடி தனபரன் மட்டு. புதுக்குடியிருப்பு) என்பவர் வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். —ரி-வி

## மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம்)

இன்று 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக்கடனைச்செலுத்த முடியும் என்பதனை தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துங்க பதவியேற்ற பின்பு, பிரேமதாசா காலத்தில் நடந்த ஊழல்கள், துஷ்பிரயோகங்களை களைந்த நல்ல மனிதராக தென்பட்டார். கம் உதாவ நிகழ்ச்சிகளை நிற்பாட்டினார் ஆடைத்தொழிற்சாலை பற்றிய சீர் திருத்தம், விசேட பொலிஸ்படை ஆகியவற்றை நீக்கும் முயற்சியில் அக்கறை காட்டினார்.

இருந்தபோதிலும் எதிர்க்கட்சிகளுக்கு கொடுக்கவேண்டிய மாகாண சபைகளை கொடுக்காது விட்டதினால் அவர் ஜனநாயகத்துக்கு விரோதமான செயலில் ஈடுபடத்தொடங்கியுள்ளார். இது பற்றி பத்திரிகைகளுக்கு விசேட அறிக்கை கொடுக்கவில்லை.

இந்த ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூடிய அக்கறை செலுத்துவதாக இல்லை. நீதிமன்றத்துக்கு போவது மாத்திரமல்ல இலங்கை, உலக மக்கள் மத்தியில் இந்த ஜனநாயக விரோதச் செயலை எடுத்துக்கூறவேண்டும்.

எதிர்வரும் 31ம் திகதி ஒரு நாளில் ஆர்ப்பாட்டம் நடாத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன. இந்த நடவடிக்கை போதாது. இந்த ஜனநாயக விரோதச் செயலுக்கெதிராக முழுச்சக்தியையும் பிரயோகிக்கவேண்டும்'' என்றார். சு-சி


வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

யாழ். கல்விக்கோட்டம்

நடாத்தும்

★ கலைவிழா ★

இடம்: ஸ்ரான்லிக் கல்லூரி

(கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்)

நேரம்: இரவு 7-00 மணி

காலம்: 30 - 05 - 1993

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு: 10/- 15/-

விளம்பர அன்பளிப்பு

சயன்ஸ் ஹோல்

(ஏ-3165)

# இந்தியபடையை அழைக்காது பிரச்னையை தீர்க்கவேண்டும்

## ஈ. பி. டி. பி. கூறுகிறது

(கொழும்பு)

இந்தியா, இலங்கையின் உற்ற நண்பனாக விளங்கி வருகிறது. அந்த வகையில் இலங்கையின் இனப்பிரச்னை விடயத்திலும் அனுதாபமான கண்ணோட்டத்தை கொண்டுள்ளது அதேவேளை இலங்கையின் இனப்பிரச்னை ஒரு உள்நாட்டுப் பிரச்னை அவ்வகையில் அதனை எமக்குள் தீர்க்க வேண்டும். இந்த வகையில் வேறொரு நாட்டுப் படையின் உதவி தேவையில்லை.

இவ்வாறு ஈ. பி. டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்துள்ளார். 'புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியப்படையினர் மீண்டும் ஈடுபடுத்தப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி.விரும்புகிறதா என கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறுகையில்: புலிகளுக்கு எதிரான செயற்பாட்டில் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒருமித்த கருத்து ஏற்படவேண்டும். அவ்வாறு ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தடையாக உள்ள காரணங்கள் களையப்படவேண்டும்.

இனப்பிரச்னைதீர்வு தொடர்பாக காலம் சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் எமக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டிருந்தும் அது குறித்து இப்போது தெரிவித்து வீண் சர்ச்சையை ஏற்படுத்த தாம் விரும்பவில்லையென்றும் அவர் தெரிவித்தார். (ச-கி)

# பிரதமர் ரணிலுக்கு விரைவில் திருமணம்?

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது திருமணப் பேச்சுக்கள் நடப்பதாக அவருடன் நெருங்கிய குடும்ப வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

பல மிகப்பெரிய புள்ளிகள் இவருக்கு பெண் கொடுக்க முன்வந்துள்ளபோதிலும் அவர் பிடிகொடுக்காமல் நழுவி வருவதாகவும் இப்போதுதான் இல்லை, பொறுப்போம் என்று அவர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

44 வயதான இவர் ஒரு சகி உத்தரண்யமவராவார். (ச-கி)

# கம்போடியா தேர்தல் கண்காணிப்பு குழுவில் இரு இலங்கையர்

(கொழும்பு)

கம்போடியாவில் இடம் பெற்ற பொதுத் தேர்தல் கண்காணிக்கும் குழுவில் இலங்கையர் இருவரும் இடம் பெற்றுள்ளனர்.

டாக்டர் சாதந பெரேரா, திரு. ஜவன் தியாகராஜா ஆகிய இருவருமே அவதானிகள் குழுவில் இடம்பெற்ற இருவராவர்.

பல தாசப்தங்களுக்குப்பின் கம்போடியாவில் தேர்தல் இடம்பெற்றது தெரிந்ததே. ச-கி

# கொழும்புத் தமிழருக்கு அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் தமிழர்கள் அடையாள அட்டைகள் மற்றும் தகுந்த ஆவணங்கள் இன்றி நடமாட வேண்டாமென கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கேட்டுள்ளார்.

மேலும் தமது வீடுகளில் தங்கும் உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் குறித்து அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிய வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (ச-கி)

யாழ். மாவட்டத்திற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளையில் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றபோதிலும் தற்போதைய காலநிலை சீரின்மையால் இம்முறை சிறிது தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும் கோமாரி கப்பலில் 3,200 மெ தொன் உணவுப்பொருள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-கி)

# உழைப்பாளரை இழந்த பெண்களுக்கு தொழில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

உழைப்பாளரை இழந்த பெண்களுக்கு பல்வேறு பயிற்சித் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அண்மையில் நடைபெற்ற உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான ஆய்வுப் பட்டறையில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

பயிற்சி முடிவில் இவர்கள் சுயமாகவோ கூட்டாகவோ தொழிலை ஆரம்பிக்கமுடியும். பயிற்சிகள் ஆறு மாத காலத்தைக் கொண்டிருக்கும்.

தொழில் தொடங்குவதற்கு முதலீடு செய்வதற்கு கடன் வசதி பெற்றுக்கொடுக்கப் படவுள்ளது இதற்கான நிதியை கெயர் ஸ்தாபனம் வழங்கவுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படும் கடன் பணம் மீளப் பெறப்பட்டு அவர்களின் பெயரில் வைப்பிலிடப்படும். (159)

# தெற்கில் வெள்ளப்பெருக்கு ஆறு பேர் நீரில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

தெற்கில் ஏற்பட்டுள்ளபெரும் வெள்ளப்பெருக்கினால் ஆறு பேர் பலியாகியதுடன் 60,000க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பலர் வீடுகளை இழந்து பாடசாலைகள், விகாரைகள் ஆகியவற்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதிக மழை காரணமாக ஏற்பட்டுள்ள இவ்வெள்ளப் பெருக்கில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் கடற்படைப் படகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை போன்ற பகுதிகளும் நேற்று முன்தினம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தண்ணீர் மட்டம் பல இடங்களில் உயர்ந்து வருகின்றது என்றும் கூறப்படுகிறது. —ச-கி

# இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை இரத்தவங்கிக்கு "O" குறூப் இரத்தம் அவசரமாக தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

"O" குறூப் இரத்தமுள்ளவர்கள் உடனடியாக தம்முடன் தொடர்புகொள்ளுமாறு 'சஞ்சீவி' அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரு தமிழர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற வசகரையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகலிங்கம் (20 வயது) என்பவரை இராணுவத்தினரால் சுட்டுக்கொன்றனர். —கி

# ஜெர்மனில் தீவைப்பு 5 அகதிகள் பலி

(பொன்)

ஜெர்மனில், துருக்கி அகதிகள் தங்கியிருந்த வீட்டுக்கு நேற்று தீவிரவாதிகள் தீவைத்ததில் 2 பெண்கள் உட்பட ஐவர் பலியாகினர். இரு குழந்தைகள் காயமடைந்தன.

மற்றொரு சம்பவத்தில் வெளிநாட்டு அகதிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் வரை காயமடைந்தனர்.

ஜெர்மனில் அரசியல் தஞ்சம் கோருபவர்களை கட்டுப்படுத்தும் சட்டம் நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட உடனே இத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது. -கி

# மாவுடன் 'வாதுவ' வந்தது

(நெல்லியடி)

திருமலையிலிருந்து புறப்பட்ட 'வாதுவ' கப்பல் நேற்றுக்காலை 4000 மெற்றிக்தொன் மாவுடன் பருத்தித்துறையை வந்துசேர்ந்தது.

இறக்கும் பணிகள் உடன் ஆரம்பமானது. இக்கப்பலில் வேறெதுவும் எடுத்துவரப்படவில்லையெனத் தெரியவருகின்றது. (150-கி)

தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.எல்.எவ் வும் கூட்டாக தெரிவித்துள்ளன.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்க் குழுக்களுக்கு ஏற்கனவே தெரிவுக் குழுவின் தலைவர் அழைப்பு விடுத்திருந்தார்.

தெரிவுக்குழுவை தமிழ் கட்சிகள் தொடர்ந்தும் பகிஸ்கரித்து வருவதால் அதன் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையுமொரு நிலை ஏற்படலாமென அவதானிகள் கூறியுள்ளனர். (ச-கி)

தெரிவுக் குழுவிடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கவேண்டுமென பல கட்சிகளும் கடந்த பல மாதங்களாகவே வற்புறுத்திவந்தன. தற்போது ஜனாதிபதி பிரேமதாஸாவின் மறைவின்பின் தெரிவுக்குழுவின்முன் தங்கள் யோசனைகளை சமர்ப்பிக்க இக்கட்சிகள் முன்வந்துள்ளனவாம். ச-கி

# ஜனாதிபதி தேர்தல் எதிரணிகள் சுறுசுறுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்க்கட்சிகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடையும் வழிகளை கண்டறிவதற்கு ஒரு குழுவை நியமித்திருக்கின்றது. இந்த குழுவை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

இக்குழுவின் தலைவராக அனுருத்த ரதவத்தை நியமிக்கப்பட்டுள்ளார். (ச-கி)

புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்க நாற்பது பேர் கொண்ட விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் செயல்பட்டு வரும் இப்படைப் பிரிவு கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையான பகுதிகளில் 24 மணி நேரமும் மற்றும் கொழும்பு நகர் உட்பட அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இப்பொலிஸ் பிரிவினர்கள் கண்காணிப்பு இருக்கும்.

நீர்கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டு இவ் விசேட பிரிவு செயல்படும் இப்பிரிவுக்கு டி. ஐ. ஜி. குணரத்தின பொறுப்பாக இருப்பார்.

விசேட அதிரடிப் பயிற்சி பெற்ற பொலிசார் இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வடக்கு-கிழக்கு யுத்த முனைகளில் நன்கு பரிச்சயம் உள்ளவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ச-கி

அரசியல்வாதிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கும், அரசு உயர் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதுடன் அவர்களது வீடுகளுக்கும் பலத்த காவல் போடப்பட்டுள்ளது. மேலும் சந்தேகத்திற்கிடமானவர்கள் கண்காணிக்கப்பட்டும் வருகிறார்களாம்.

# விமான நிலையத்தில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர் எனக் கருதப்படும் தமிழ் இளைஞர் ஒருவர்நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கொழும்பு இரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறாராம்.

1991ம் ஆண்டு ஆயுதங்கள் ஏற்றிவந்த கப்பலொன்று மலேசிய அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டபோது அக்கப்பலிலிருந்து தப்பியோடியவர் என்றும் பலவருடகாலமாக மலேசிய பாதுகாப்பு அதிகாரிகளால் தேடப்பட்டு வந்தவர் என்றும் கூறப்படுகிறது. -ச-கி

ஆளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி 1994ம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெல்வதற்கு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென்று மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தால் மேல் மாகாண சபையில் புரியப்பட்ட ஊழல், துஷ்பிரயோகம் ஆகியவற்றைக் களைவதற்கு நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும் அத்தருணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நல்ல முறையில் நிர்வகிப்பவர்கள் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ச-கி

மாகாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் உள்ளதா என்று பரீட்சிப்பதற்கு நீதிமன்றம் செல்லவேண்டும்.

மாகாணசபைகளுக்கு நிதி ஒதுக்கீடு, ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்தது போன்று அவர் கையில் இல்லை. அதனை நாடாளுமன்றம்தான் தீர்மானிக்கும். சில வேளைகளில் நாடாளுமன்றத்தில் அரசுக்கு அதிக ஆசனங்களிருப்பதால் நாடாளுமன்றம் மூலம் அரசாங்கம் இதை அமுல்படுத்தலாம் என்றார். ச-கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் இலக்கம் 8, மில் வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number D/16536/B